பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
# Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 08 திங்கட்கிழமை 21.04.2025 கதிர் 163

### இனிது ரகசியம் அல்ல!

அரசியல்பொல்லாதது.அதில்இன்று நண்பர்களாகஉள்ளவர்கள்நாளையே எதிரிகளாகவும், துரோகிகளாகவும் மாற்றப்பட்டுவிடுவார்கள். கூகுள் தேடலில் ஈடுபட்டிருந்தபோது ☞ 2

# ஈஸ்டர் தாக்குதலாளிகளுக்கு உடந்தையாக இருந்தோரையும் விசாரணையில் வெளிப்படுத்துக

## கத்தோலிக்க ஆயர் பேரவை வலியுறுத்து

2019 தாக்குதலுக்கான தற்போதைய விசாரணை முயற்சிகளை அங்கீகரித்து, அதனை மேலும் வலுப்படுத்தவேண்டும் என்று ஈஸ்டர் ஞாயிறு நினைவு நாளை முன்னிட்டுவெளியிட்டசெய்தியில்,இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை (CBCSL), வலியுறுத்தியுள்ளது.

'தற்போதைய ஆளும்தரப்பு ☞ 2

## தொடருந்திலிருந்து தவறி விழுந்த முதியவர் சாவு

இரு தனித்தனி தொடருந்து விபத்துகளில், தொடருந்துத் திணைக்கள ஊழியர் ஒருவர் மற்றும்மூத்தகுடிமகன்ஒருவர்உயிரிழந்தனர்.

மற்றொரு சம்பவத்தில், மன்னார் மாவட்டத்தின் சிறிநாவற்குளத்தில் ☞ 2

## அறிக்கை சிஐடியிடம்

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான அரசுத் தலைவர் ஆணைக்குழு அறிக்கை, மறைக்கப்பட்டபகுதிகள் உட்பட முழுமையாக நேற்று குற்றப் புலனாய்வுத் துறையிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டது. அரசுத் தலைவர் அநுரகுமாரவின் ☞ 8

### புதிய கல்வி முறையின் கீழ்

## கல்விச் சமச்சீரற்ற நிலைய போக்குவதே முக்கிய இலக்கு

### பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

2026 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ள புதிய கல்வி முறை, இலங்கையின் கல்விச் சூழலில் நீண்ட காலமாக நிலவி வரும் சமத்துவமற்ற வாய்ப்புகளைக் களைவதை முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது என்று பிரதமர் ஹரிணி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டம், இரட்டைப் பெரியகுளம் கிராம மண்டபத்தில்நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோது இதனைத் ☞ 2

### பன்னாட்டு நாணய நிதியத்துடனான

## நான்காவது மறுஆய்வு பேச்சு வோஷிங்டனில் தொடங்கியது

இலங்கை மற்றும் பன்னாட்டு நாணயநிதியம்(IMF)இடையிலான விரிவாக்கப்பட்ட நிதி வசதி (சிxtended Fund Facility - EFF) திட்டத்தின் நான்காவது மறுஆய்வு தொடர்பான அதிகாரப்பூர்வ பேச்சு தற்போது அமெரிக்காவின் வோஷிங்டனில் நடைபெற்று வருகின்றன.

இந்தபேச்சுக்களில்பங்கேற்க, நிதி அமைச்சகம்மற்றும்மத்தியவங்கியின் அதிகாரிகள் அடங்கிய இலங்கைத் தூதுக்குழு அமெரிக்காவிற்கு பயணம் செய்துள்ளது. இதை நிதித் துணை அமைச்சர் பேராசிரியர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த நான்காவது மறுஆய்வு, இலங்கையின் பொருளாதார நிலைத்தன்மையை உறுதி செய்யும் முக்கிய கட்டமாகும். இந்தப் பேச்சின் வெற்றிகரமாக நிறைவுற்றால் இலங்கை அடுத்த கட்டமாக 334 மில்லியன் டொலர் நிதியை பெற்றுக்கொள்ளும். ☞ 8

## அமெ. வரி குறித்து பேச்சு நடத்த கொழும்பிலிருந்து குழு பயணம்

2025 ஏப்ரல் 22

அமெரிக்காவிதித்துள்ளபுதியவரிகள் காரணமாக, தனது பொருளாதார மீட்பு முயற்சிகள் பாதிக்கப்படக்கூடும் என்ற அச்சத்தில்உள்ளஇலங்கைஆளும்தரப்பு, அமெரிக்க அதிகாரிகளுடன் உயர் மட்ட பேச்சு (negotiations) நடத்துவதற்காக ஒரு தூதுக்குழுவைஅமெரிக்காவிற்கு ☞ 2

## கொலைக்குத் திட்டம் தீட்டிய 9 பேர் ஆயுதங்களுடன் கைது

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் ஒஸ்மான் குணசேகரவைக் கொலை செய்ய சதித் திட்டம் தீட்டினார்கள் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பாக, இலங்கை காவல்துறையின் சிறப்பு அதிரடப் படையினரால் ஒன்பது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள்,முன்னாள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியும், போதைப்பொருள் கடத்தலுக்காக தீவிரமாக தேடப்படும் கெஹல்பத்தர பத்மேவின் நெருங்கிய கூட்டாளிகள் என்று காவல்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைதுசெய்யப்பட்டநபர்களில் ☞ 2

## புதிய நுளம்பினம் கண்டுபிடிப்பு

மீரிகம பகுதியில், இலங்கைக்கே உரித்தான புதிய நுளம்பு இனம் ஒன்று (Culex - Lophocerao-myia - cinctellus) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது, நாட்டின் உயிரியல் பல்வகைமையில் முக்கியமான இணைப்பாகக் கருதப்படுகின்றது.

இந்த நுளம்பு இனத்தை, மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின்பூச்சியியல்வல்லுநர்கயான்குமாரசிங்க தலைமையிலான குழு, வடிவியல் மற்றும் மூலக்கூறு ஆய்வுகளின் மூலம் அடையாளம் கண்டுள்ளது . இந்த இனம், வைரஸ்கள் மற்றும் பிற நோய்களை பரப்பும் திறன் கொண்டவை எனவும், ☞ 2

## உயர்தரப் பெறுபேறுகள் இந்த மாத இறுதிக்குள்

*உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் இந்த மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என்று பரீட்சைத்துறை தெரிவித்துள்ளது.*

*தொடக்கத்தில் ஏப்ரல் 20க்கு முன்னர் முடிவுகள் வெளியிட அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், பல நடைமுறை சிக்கல்கள் தாமதத்திற்குக் காரணம் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.*

*இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு மொத்தம் 333,185 பரீட்சார்த்திகள் தோற்றினர்.*

# அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் தந்திரமே ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்

## அரசுத் தலைவர் அநுர மீண்டும் தெரிவிப்பு

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலை சிலர் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் ஒரு தந்திரமாகப் பயன்படுத்தினர் என்று அரசுத் தலைவர் அநுரகுமார குற்றம் சுமத்தினார்.

பொலன்னறுவையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பேரணியில் உரையாற்றிய அவர், 'அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட மிகப்பெரிய துயர நிகழ்வு' 2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்' என்று கூறினார்.

அநுரகுமார, 'கடந்த ஐந்தரை ஆண்டுகளாக விசாரணைகளை முன்னெடுத்த ஆளும்தரப்புகள் உண்மையான சூத்திரதாரிகளை



மறைக்கவே முயன்றுள்ளன. 2019இல் ஆட்சிக்குவந்தஆளும்தரப்பும்,அதனைத் தொடர்ந்து வந்தவர்களும், நீதிக்காக செயலில் ஈடுபடவேயில்லை'என்றார்.

அதற்கும்மாறாக,தாம்ஆட்சியேற்று6 மாதங்களுக்குள்,பாதிக்கப்பட்டவர்களுக்கு பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை வழங்கும் வழிகளை தொடக்கியுள்ளார் என்றும் தெரிவித்தார்.

அரசுத் தலைவர் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக் காலங்களிலும்அவர்இந்தக்குற்றச்சாட்டை முன்வைத்து வந்தார். ஆனால், அவர் பதவிக்கு வந்த பின்னர் அதனை உறுதிப்படுத்தும்வகையிலானஎந்தவொரு காத்திரமான அடையாளத்தையும் அவரால் காண்பிக்க முடியவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் அரசுத் தலைவர் விசாரணை ☞ 8

## வடக்கில் 95 பாடசாலைகள் ஜப்பானி நிதியில் சீரமைப்பு

### புங்குடுதீவில் தொடங்கியது திட்டம்

வடக்கு மாகாணத்தில் உள்ள பின்தங்கிய 95 பாடசாலைகளை சீரமைப்பதற்காக ஜப்பான் அரசு வழங்கிய 57 மில்லியன் ரூபா செலவிலான திட்டப் பணிகள் நேற்றுத் தொடங்கின.

☞ 2



## இனி இது .....

கண்ணில் பட்ட ஒரு சில அரசியல் கிசுகிசுக்களை இன்றைய அரசியல் சூழலில் வைத்துப் பார்க்கும்போது சிரிப்பாக இருந்தது. நான் பார்த்த அந்த அரசியல் கிசுகிசுக்களில் அப்போது எதிர்க் கட்சிகளாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டணமைப்பு ஜேவிபியும் இணைந்து அரசியல் முன்னெடுப்புக்களில் ஈடுபடுவதற்கான முயற்சிகள் திரைமறைவில் இடம்பெற்று வருவதாக சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் சில தெரிவித்திருந்தன. ஆனால் இன்று நிலமை தலைகீழ். வடக்கு கிழக்கில் இந்த இரண்டு தரப்புக்களும்தான் இன்று மிக முக்கிய அரசியல் எதிரிகள்.

வடக்கு கிழக்கில் தமது ஆளும்தரப்பை உள்ளாட்சி மன்றங்களின் அதிகாரத்தில் இருத்த சாம, தான, தண்ட, பேரம் என்று எதைவேண்டுமானாலும் செய்யலாம் என்று தேசிய மக்கள் சக்தியும் அதன் தலைவர் அநுரகுமாரதிசநாயக்கவும்காய்நகர்த்தப்போக, அது அரசியல் பூகம்பமாக வெடித்துள்ளது. இந்த வெடிப்பின் ஆகப் பிந்திய விளைவாக, அரசுத் தலைவரின் நிதி ஒதுக்கீட்டுக் கருத்து முதன்மை பெற்றிருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறும் சபைகளின் முன்மொழிவுகளுக்குக கண்ணை மூடிக்கொண்டு நிதி ஒதுக்கப்படும் என்றும் அப்படியில்லாத சபைகளின் முன்மொழிவுகளுக்குஒன்றுக்குப்10தடவைகள் யோசித்தேசெயற்படவேண்டியிருக்கும்என்றும் ஜனாதிபதி மார்ச் 29ஆம்திகதிதிஸ்ஸமஹாரகம, புத்தள, கண்டி, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, கந்தளாய், மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் திரும்பத் திரும்ப கூறியிருந்தார். அவரது இந்தக் கருத்து அரசமைப்பின் 33ஆம் பிரிவு உறுதிப்படுத்தும் நீதியானதும்நேர்மையானதுமான தேர்தலை நடத்தும் கடமையை அரசுத் தலைவர் கொண்டிருக்கின்றார் என்கிற சரத்தை மீறுகின்றது என்று தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் கடுமையாகக் கண்டித்திருந்தார். அதுமட்டுமல்லாமல் அரசுத் தலைவரின் கருத்து மக்களுக்கு லஞ்சம் கொடுக்கும் நேர்மையற்ற முயற்சி என்றும் கடுமையாக விமர்சித்திருந்தார்.

அரசுத் தலைவர் அநுரவும் தமிழ் அரசு செயலாளர் சுமந்திரனும் நல்ல நண்பர்கள். நாடாளுமன்றத் தேர்தலில் சுமந்திரன் வெற்றி பெறாதபோது, "என்ன இப்படியாகிவிட்டதே" என்ற வகையில் அவருக்கு அழைப்பெடுத்து அனுதாபம் தெரிவிக்கக்கூடிய அளவுக்கு நெருக்கம். ஆனால், இவையெல்லாம் அதிகாரம் கைகளுக்கு வரும் வரையில்தான். அநுர அரசுத் தலைவரானதின் பின்னர் அவர் முன்னகர்த்தும் அரசியல் இப்போது இருவரையும் அரசியல் எதிரிகளாக்கியுள்ளன. அவர்களின் தனிப்பட்ட நட்பு இதனால் பாதிக்கப்படாமல் இருக்கலாம். ஆனால், அரசுத் தலைவர் தமிழ்த் தலைவர்களை இனவாதிகள் என்பதும், அவர்கள் அநுரவை பொய்யர், தேர்தல் விதிமுறைகளை மீறி நடக்கிறார் என்பதுமாக அரசியல் வெறுப்பும், பகையுணர்வும் தீவிரம் பெறுகின்றன.

இதன் மிகப் பிந்திய வடிவமாக, ஜனாதிபதியின் கருத்து தேர்தல் சட்டங்களை மீறி இருப்பதால் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர தேர்தல் ஆணைக்குழுவிற்குத்தெம்பிருக்கிறதா, அப்படி வழக்குத்தொடரப்படும்போதுதமக்குரியவழக்கு விடுபாட்டு உரிமையைப் பயன்படுத்தாமல் அந்த வழக்கை எதிர்கொள்ளும் திராணி ஜனாதிபதிக்கு இருக்கின்றதா என சுமந்திரன் நேற்று சவால் விட்டிருக்கின்றார். அம்பாறை மாவட்டம் திருக்கோவிலில் நடந்த தேர்தல் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி தான் பகிரங்கமாகக் கூறிய இந்தக் கருத்துத் தொடர்பில் புதுவித விளக்கங்களை இப்போது தெரிவித்து வருகின்ற பின்னணியில் இந்த விடயத்தை நீதிமன்றத்தில் தீர்வு காணத் தயாராக என்று சுமந்திரன் கேட்டிருக்கிறார்.

''உள்ளூராட்சி சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 82 'இ' மற்றும் 82 'ஈ' ஆகிய இரண்டு பிரிவுகளையும் ஜனாதிபதி மீறி இருக்கின்றார். அப்படி ஜனாதிபதி மீறி இருக்கின்றார் என்று தேர்தல் கண்காணிப்பு குழுவைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் தேர்தல் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்திருக்கின்றார். அந்த முறைப்பாட்டுக்கு தேர்தல் ஆணைக்குழு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எங்கள் அரசமைப்பிலே 35 ஆவது உறுப்புரையிலே ஒரு பிரிவு இருக்கின்றது. அது ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடுக்க முடியாது என்பதற்கான விடுபாட்டு உரிமை. அதாவது பலரும் நினைப்பது அதன்படி ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தொடுக்க முடியாது என்றுதான். ஆனால், அப்படி அல்ல. அதாவது அது விடுபாட்டு உரிமைதான். அப்படி யாராவது வழக்குத் தொடுத்தால், அவர் (ஜனாதிபதி) நீதிமன்றுக்குச் சென்று அந்த வழக்கிலிருந்து விடுபடுவதற்கான உரிமை தனக்கு உண்டு என்று நீதிமன்றத்திடம் சொல்வதற்கான ஒரு ஏற்பாடு. அது அரசமைப்பின் 35 ஆவது உறுப்புரையிலே உள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு நான் ஒரு சவால்விடுகின்றேன். ஜனாதிபதிநேரடியாகவே தேர்தல் சட்டத்தை மீறியிருக்கின்றார். ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடுக்கின்ற தெம்பு உங்களுக்கு இருக்கின்றதா? நீங்கள் உண்மையாகவே சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழுவாக இருந்தால், அவருக்கு எதிராக வழக்குத் தொடருங்கள். அவருக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என்று எந்தச் சட்டமும் சொல்லவில்லை. அப்படித் தேர்தல் ஆணையம் வழக்குத் தொடுக்கின்றபோது, ஜனாதிபதிக்குஇரண்டாவது சவாலை நான் முன்வைக்கின்றேன். விடுபாட்டுரிமையை விலக்கி, அந்த வழக்கை அந்த எதிர்கொள்ளும்படி நான் ஜனாதிபதிக்குச் சவால் விடுகின்றேன்.

இப்போது மாறி மாறி ஜனாதிபதி மறுப்பு அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்கின்றார். நாங்கள் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டிய பின்னர் இல்லை, இல்லை நான் அப்படிச் சொல்லவில்லை. நான் இப்படிச் சொன்னேன். நான் இதைத்தான் சொன்னேன். மற்றக் கட்சிகள் நிர்வகிக்கின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்குநிதிகொடுக்கமாட்டோம்என்று நாங்கள் சொல்லவில்லை என்கிறார். நாங்கள் ஆராய்ந்துபார்த்துத்தான்கொடுப்போம்என்றே சொன்னேன் என்றெல்லாம் கூறுகின்றார்.

அது அப்படியே இருக்கட்டும். தேசிய மக்கள் சக்தி நிர்வகிக்கின்ற உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து வருகின்ற கோரிக்கைகளுக்கு நாங்கள் கண்ணை மூடிக்கொண்டு நிதியைக் கொடுப்போம் என்று ஜனாதிபதி சொல்லி இருக்கின்றார். யாராவது கண்ணை மூடிக்கொண்டு நிதி ஒதுக்கீடு செய்ய முடியுமா? அதற்கு நிதி விதிமுறைகள் இல்லையா? இப்படியாக அப்பட்டமான ஒரு பொய்யையும் சொல்லி, மக்களை தன்னுடைய கட்சிக்கு வாக்களிக்கத் தூண்டி இருக்கின்றார். தன்னுடைய கட்சிக்கு மக்களை வாக்களிக்க செய்வதற்காக இப்படியான பொய்களைச் சொல்லி, பசாப்பு வார்த்தைகளை சொல்லி, முறையற்ற அழுத்தங்களை பிரயோக்கின்றார்.

நீதியான - நேர்மையான - தேர்தல்களை நடத்த வேண்டிய பொறுப்பு தேர்தல் ஆணையத்துக்கு மட்டுமல்ல, ஜனாதிபதிக்கும் அரசமைப்பின் கீழ் உண்டு. அதையும் மீறி, தேர்தல் சட்டங்களையும் மீறி, தேர்தல் சட்டங்களை மீறுகின்ற குற்றங்களை புரிகின்றவராக, மிகவும் கீழானவராக ஜனாதிபதி இறங்கி வந்திருக்கின்றார்" என்று சகட்டு மேனிக்கு விமர்சித்திருக்கின்றார் சுமந்திரன்.

அவரிடம் எப்போதுமே இந்தப் பழக்கம் இருக்கிறது. நல்லவர்களாக இருக்கும் வரைக்கும் அவர்களோடு சேர்ந்தியங்கத் தயாராக இருப்பார், அதுவே அவர்கள் தவறிழைத்துவிட்டால் அவர்களைக் காலில் தூக்கிப்போட்டு மிதிக்கவும் தயங்கமாட்டார். ரணில்விக்கிரமசிங்கவின்விடயத்திலும்அவர் இதைச்செய்துள்ளார். ரணில் அரசுத்தலைவர் ஆவதற்கு முன்னர் அவரது ஆட்சியைத் தாங்கிப் பிடிக்கும் தூணே சுமந்திரன்தான் என்று கூறக்கூடியளவிற்கு அரசியல் நெருக்கத்தோடு செயற்பட்டார். ஆனால், ரணில் அரசுத் தலைவராகி, அறத்திற்குப் புறம்பாகச் செயற்படத் தொடங்கியபோது அவரைச் சகட்டு மேனிக்கு பிளந்துகட்ட அவர் தயங்கியதில்லை. இப்போது அநுரவின் முறை. வாங்கிக் கட்டிக்கொள்கிறார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஈஸ்டர்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்தசிலநடவடிக்கைகள்வரவேற்கத்தக்கவை. ஆனால்விசாரணைநேரடிதாக்குதலாளிகளை மட்டும் அல்லாது, அவர்களுக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த சக்திகளையும் வெளிக்கொணரவேண்டும்' என்று ஆயர் பேரவை தெரிவித்துள்ளது.

'இந்த உறுதிப்பாடு பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல, தேசத்தின் நீதி மற்றும் நம்பிக்கைக்காகவும் அத்தியாவசியமானது' என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களில் 250க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர், அதில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், குழந்தைகள் மற்றும் உயிர்த்த ஞாயிறு ஆராதனைக்கான தேவாலயங்களுக்கு வந்த பக்தர்களும் அடங்குவர். பல்வேறு சிங்கள மற்றும் தமிழ் அமைப்புகள், குற்றவாளிகள் இன்னமும்தண்டிக்கப்படாததைவலியுறுத்தி, சர்வதேச விசாரணையை கோரியுள்ளன.

இலங்கையின் சாந்தி மற்றும் சமூக ஒற்றுமைக்கான தங்கள் வலியுறுத்தலை ஆயர்கள் பேரவை மீண்டும் பதிவு செய்துள்ளது. மத்திய கிழக்கு, உக்ரைன் உள்ளிட்ட வன்முறைகளால் பாதிக்கப்பட்ட உலகின் பிற பகுதிகள் மீதான தமது கரிசனையையும்உயிர்த்த ஞாயிறுதினமான நேற்று அவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

## தொடருந்திலிருந்து.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற விபத்தில் 68 வயது முதியவர் உயிரிந்தார். தலைமன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்க திட்டமிடப்பட்ட தொடருந்தில் உறவினர்கள் குழு ஏற உதவி செய்தபின், கீழே இறங்க முயன்றபோது அவர் தவறி விழுந்து உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பரக்கும்புரமற்றும்அம்பேவெலதொடருந்து நிலையங்களுக்கு இடையில் தண்டவாள சோதனையில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் தொடருந்து மோதி உயிரிழந்தார், கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த தொடருந்து, தியதலாவையைச் சேர்ந்த 25 வயதுடைய ஊழியர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த இரு சம்பவங்களும், தொடருந்து பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் பயணிகள் விழிப்புணர்வின் அவசியத்தை மீண்டும் ஒருமுறை முன்னிலைப்படுத்துகின்றன.

## புதிய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் சுகாதாரத்திற்கு சவாலாக இருக்கக்கூடியதாகவும் அறியப்படுகிறது .

இந்தக் கண்டுபிடிப்பு, இலங்கையின் நுளம்பு இனங்களின் பல்வகைமையை மேலும் விளக்குகிறது. இது, நாட்டின் உயிரியல் பல்வகைமையைப் பாதுகாக்கும் முயற்சிகளில் முக்கியமானதாகும்.

இந்தபுதியநுளம்புஇனத்தின்கண்டுபிடிப்பு, நாட்டின்நுளம்புகட்டுப்பாட்டுநடவடிக்கைகளை மேம்படுத்தும் தேவையை வலியுறுத்துகிறது. பொதுமக்கள், நுளம்பு இனங்களின் பரவலைக் கட்டுப்படுத்தும்நடவடிக்கைகளில்பங்கேற்பதை உறுதி செய்ய வேண்டும்.

## கொலைக்குத் .....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு பேர் இலங்கை இராணுவத்தில் பணியாற்றிய பின்னர் சேவையை விட்டு விலகியவர்கள் எனவும், அவர்கள் பல்வேறு பாதுகாப்பு பயிற்சிகளை பெற்றிருந்தவர்கள் என்பதும் விசாரணையில் தெரியவந்திருக்கிறது.

சந்தேகநபர்களிடமிருந்துவிசாரணையின் போது, இரண்டு வீ-56 துப்பாக்கிகள், 118 தோட்டாக்கள், மூன்று மகசின்கள், ஒரு வேன், ஒரு கார், ஒரு முச்சக்கர வண்டி மற்றும் நான்கு மொபைல் போன்கள் ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.

இவர்கள்22முதல்57வயதுக்குட்பட்டவர்கள் எனவும், உடுகம்பொல, காலி, கம்பஹாமற்றும் ஹெட்டிபொல போன்ற பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## அமெ. வரி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பியுள்ளது.

இந்த தூதுக் குழுவின் தலைவராக நிதி துணை அமைச்சர் பேராசிரியர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ உள்ளார். அவர்கள், அமெரிக்க வர்த்தக பிரதிநிதிகளை சந்தித்து, இலங்கையின் முக்கிய வர்த்தகத் துறைகள், குறிப்பாக ஆடைத்துறை, இரப்பர், பிளாஸ்டிக், மற்றும் உணவுப் பொருட்கள் ஆகியவற்றின் மீது அமெரிக்கா விதித்துள்ள 44% வரி பற்றிய தமதுகவலைகளையும்அதனால்ஏற்படக்கூடிய விளைவுகளையும் வெளிப்படுத்துவார்கள்.

அமெரிக்கா, விடுதலை நாள் (Liberation Day) என அழைக்கும் புதிய வரி கொள்கையின் கீழ், அனைத்து நாடுகளின் இறக்குமதிகள் மீதும் 10% அடிப்படை வரி மற்றும் 60 நாடுகளுக்கு 10% முதல் 50% வரை பரஸ்பர வரிகளை (reciprocal tariffs) விதித்துள்ளது. இலங்கை, 44% வரி விதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் உள்ளது. இந்த வரிகள், இலங்கையின் முக்கிய வர்த்தகத் துறைகள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழ்நிலையில், இலங்கை ஆளும்தரப்பு, அமெரிக்காவுடன் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதற்கும், புதிய வரிகள் தொடர்பான சலுகைகளைப் பெறுவதற்கும் முயற்சிக்கிறது. இந்த பேச்சு, இலங்கையின்பொருளாதாரமீட்புமுயற்சிகளில் முக்கியமான கட்டமாகக் கருதப்படுகிறது.

## ஜப்பான் அரசின் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜப்பான் அரசின் நிப்போன் பவுண்டேஷன் நிறுவனத்தின் நிதி உதவியுடன் இலங்கையில் இத்திட்டத்தை சேவா லங்கா நிறுவனம் நடைமுறைப்படுத்துகின்றது. இரண்டு வருடங்கள் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் தொடக்க நிகழ்வு புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் இடம்பெற்றது. வடக்கு மாகாண பிரதமர் செயலாளர் இளங்கோவன் திட்டப் பணியைத் தொடக்கி வைத்தார்.

புங்குடுதீவு முருகன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட வழிபாடுகளின் பின்னர் பாடசாலையின் சீரமைப்புப் பணிக்கான வேலைகள் தொடங்கப்பட்டன.

சேவாலங்கா நிறுவனத்தின் ஸ்தாபகரும் முன்னாள் கனடாவுக்கான இலங்கை தூதுவருமான ஹரிச குமார நவரத்ன, அந்த நிறுவனத்தின் பணிப்பாளர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## கல்விச்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

'நாட்டின் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரே தரமான கல்வி வழங்கப்படவேண்டும். தற்போதுள்ள பரீட்சை சார்ந்த முறைமையிலிருந்து விடுபட்டு, விரிவானதும் மையமில்லாததுமான (decentralized) கல்வி அமைப்பு கட்டியெழுப்பப்படும்,' என்று ஹரிணி தெரிவித்தார்.

அவரது கூற்றுப்படி, பதின்மூன்று ஆண்டுகள் கல்வி என்பது நாட்டில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் அடிப்படை உரிமையாக பார்க்கப்படும்.

இந்த புதிய கல்வி மாற்றத்திற்கு ஏற்ப, பாடத்திட்டம், ஆசிரியர்களின் கற்பித்தல் நெறிகள், தேர்வு முறைகள், வகுப்பறை வடிவமைப்புகள் மற்றும் பள்ளிகளின் உள்கட்டமைப்பு ஆகிய அனைத்திலும் மாற்றம் மேற்கொள்ளப்படும்.

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், வரலாற்றில் இல்லாத அளவிற்கு அதிக நிதி கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்று ஹரிணி சுட்டிக்காட்டினார்.

இத்தகைய கட்டமைப்பில், மையநிலைக் கல்வி நடவடிக்கைகள் மட்டும் இல்லாமல், மாவட்டம் மற்றும் பள்ளி மட்டத்திலும் தேவைகளுக்கேற்ப தனிப்பயனாக்கப்பட்ட திட்டங்கள் வடிவமைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் நகர மற்றும் கிராமப் பகுதிகளில்உள்ளபள்ளிகளுக்குஇடையிலான வாய்ப்புச் சமத்துவ மாறுபாடுகள், கல்வித் தரத்தை பெரிதும் பாதித்து வருகின்றன. இந்த நிலையைச்சீரமைக்கும்நோக்கத்துடன்கல்வி அமைச்சும், ஆளும்தரப்பும் இணைந்து திட்டமிட்டுள்ள இந்த மாற்றம், கல்வி வழியாக சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியாக பார்க்கப்படுகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir

# வறிய குடும்பங்களுக்கான வாழ்வாதார உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு

(பாறுக் ஷிஹான்)

ரஹ்மத் பவுண்டேஷன் அனுசரணையில் இலங்கைக்கானபாகிஸ்தான்இஸ்லாமியக்குடியரசின் உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பாஹிம் உல் அஸீஸ் பங்களிப்புடன் கல்முனை பிராந்தியத்தில் உள்ள வறிய குடும்பங்களுக்கான வாழ்வாதார உலர் உணவுப்பொருள் வழங்கி வைக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை மாலை கல்முனை மயோன் பிலாசா திருமண விடுதியில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வின் முதலில் அதிதிகள் வரவேற்கப்பட்டு மாலை அணிவித்தல் மலர் கொத்து வழங்குதல் என்பன இடம்பெற்று பாரம்பரிய பொல்லடி நிகழ்வுடன் தொடர்ந்து அதிதிகள் ஊர்வலமாக அழைத்து செல்லப்பட்டு தேசியக்கொடி ஏற்றும் வைபவம் இடம்பெற்றது.

இதில் இரு நாட்டுக்கான கொடிகள் தேசிய கீதத்துடன் ஏற்றி வைக்கப்பட்டன. இலங்கைக்கான தேசிய கொடியை ரஹ்மத் பவுண்டேஷன் தலைவர் ரஹ்மத் மன்சூரும் பாகிஸ்தானுக்கான தேசிய கொடியை பாஹிம் உல் அஸீஸ ும் ஏற்றி வைத்தனர்.

அத்துடன் நிகழ்வில் முதலாவதாக கிராஅத் மௌலவி அல்ஹாபில் எம். ஐ .எம். ரியாஸ் ஓதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிகழ்வின் வரவேற்புரை மற்றும் தலைமை உரையை ரஹ்மத் பவுண்டேஷன் தலைவர் ரஹ்மத் மன்சூர் மேற்கொண்டார்.

அடுத்ததாக அதிதிகளான இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரக ஆலோசகர் நுஃமான் ரஷீத் கயானி கல்முனை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எம் .எம். முகமது ஜெய்சான் உரையை மேற்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து அதிதிகளுக்கு நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது .அதிதிகளுக்கு பொன்னாடை மற்றும் நினைவுச் சின்னங்களைரஹ்மத்பவுண்டேஷன் தலைவர் மற்றும் பவுண்டேஷன் செயலாளர் இணைந்து வழங்கி வைத்தனர்.

மேலும் நிகழ்வின் இறுதியாக நன்றியுரை பவுண்டேஷன் செயலாளர் சம்சுல் முனாவும் மௌலவி அல்ஹாபில் எம் .ஐ .எம். ரியாஸ் அல்தாபி விசேட துஆ மேற்கொண்டார் . இறுதியாக வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்வு அதில் வறிய குடும்பங்களுக்கான வாழ்வாதார உணவுப்பொருள் வழங்குதல் சுயதொழில் முயற்சிக்கான தையல் இயந்திரம் வழங்குதல் விளையாட்டு கழங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.








கல்வித் துறையில்இலங்கை மக்கள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வளர்ப்பது தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளதாக இலங்கைக்கான பாகிஸ்தான்இஸ்லாமியகுடியரசின் உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பாஹிம் உல் அஸீஸ் இந்நிகழ்வில் குறிப்பிட்டார்.

இலங்கைக்கும்பாகிஸ்தானுக்கும் இடையிலான நீண்டகால உறவை நினைவுகூர்ந்த பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்துவதற்கு பாகிஸ்தானின் அர்ப்பணிப்பையும் வலியுறுத்தினார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நெருங்கிய உறவை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற நான் எதிர்பார்க்கிறேன். இது நம் இரு நாடுகளுக்கும் நல்ல நிகழ்வுகளை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

## லொறி விபத்தில் 3 பேர் காயம்

(கிஷாந்தன்)

தேயிலை கொழுந்துகளை ஏற்றிச் சென்ற டிப்பர் ரக லொறி ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

தேயிலை கொழுந்துகளை ஏற்றிச் சென்ற டிப்பர் லொறி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில், டிப்பர் லொறியில் இருந்த மூன்று பேர் காயமடைந்து டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் ஹற்றன் பொகவந்தலாவ பிரதான வீதியில் நோர்வூட் சென்ஜோண்டிலரி தோட்டப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பொகவந்தலாவ லொய்னோன் தோட்டத்திலிருந்து ஹற்றன் வனராஜா தோட்டத்திற்கு தேயிலை கொழுந்துகளை ஏற்றிச் சென்ற டிப்பர் லொறியில் ஏற்பட்ட திடீர் இயந்திரக் கோளாறு காரணமாக லொறி ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் நோர்வூட் பொலிஸார், விபத்து நடந்த நேரத்தில் டிப்பர் லொறியில் ஏழு பேர் பயணித்தனர் என தெரிவித்தனர்.

## மின்னல் தாக்கி இறந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ. 50,000

(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறை செனவட்டை பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை மின்னல் தாக்கி உயிரிழந்த நபருக்கான மரணச்சடங்குகான கொடுப்பனவு ரூபா ஐம்பதாயிரம் சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.



சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹமது ஹனீபாவின் முயற்சியால் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜனால் இக்கொடுப்பனவு வழங்கி வைக்கப்பட்டது.



வெள்ளிக்கிழூமை வயலில் வேலை செய்து கொண்டிருந்த செந்நெல் கிராமம் -02 சேர்ந்த 27 வயது இளைஞர் ஒருவரே இவ்வாறு மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இவ் மரணக் கொடுப்பனவு வழங்கி வைக்கும் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலக கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்ஸா, கிராம சேவகர் எஸ்.எம் எம்.அறபாத், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சம்ஸத் பேகம் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எதிர்காலத்துக்கான பயணம்

இலங்கையின் கல்வி அமைப்பு தற்போது ஒரு புதிய திருப்புமுனையில் நின்று கொண்டிருக்கிறது. பல ஆண்டுகளாக பழமைவாதப் போக்கில் நகர்ந்திருக்கும் பாடத்திட்டங்கள், மாணவர்களின் வாழ்வுக்கு நேரடி தொடர்புடைய திறன்களை உருவாக்கும் வகையில் மாற்றப்படவேண்டும் என்ற தேவை தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இந்த சூழலில், ஆளும்தரப்பின் கல்வி மறுசீரமைப்பு திட்டங்கள் கல்வியின் எதிர்காலத்துக்கு ஒரு புதிய ஒளியை வழங்கும் வண்ணம் அறிகுறிகளைக் காட்டுவதாக அமைந்துள்ளன. குறிப்பாக, தலைமை அமைச்சர் (பிரதமர்) ஹரிணி அண்மையில் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், 'கல்வி என்பது தேர்வுகளை கடக்க வேண்டிய ஓர் அளவுகோலல்ல; அது மாணவரின் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கும் செயல்முறை' எனத் தெரிவித்தது, அரசின் நோக்கத்தை வெளிப்படுத்தும் முக்கியமான அறிவிப்பாகும். பாடசாலைக் கல்வியில் காணப்படும் சமச்சீரற்ற தன்னை இல்லாது செய்யப்படும் என்று அவர் தெரிவித்திருப்பதும் மிக முக்கியமானதாகும்.

தலைமை அமைச்சர் மேலும், மாணவர்கள் தொழில் தேடுபவர்களாக மட்டும் இல்லாமல், தொழில்கள் உருவாக்குபவர்களாகவும் மாற வேண்டும் என்றார். இதற்காக ஸ்டெம் (STEM) கல்வி, தொழில்நுட்பம், தொழில் சார்ந்த கற்றல் ஆகியவற்றில் அதிக முதலீடு செய்யப்படுவதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்த உறுதியான பரிமாணங்கள் அரசுத்தலைவரின் பார்வையுடனும் ஒத்துப் போகின்றன. அண்மையில் அவர் குறிப்பிட்டது போல, 'நவீன உலகுக்கு ஏற்றவாறு கல்வியை வடிவமைக்காமலிருப்பது, அடுத்த தலைமுறையை பின் தள்ளும் செயற்பாடாகும்.'

எனினும், எந்தவொரு மறுசீரமைப்பும் வெறும் அறிவிப்புகளால் மட்டுமல்ல. அரசு, கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஒருங்கிணைந்த பொறுப்புடனான செயற்பாட்டின் மூலமே வெற்றிபெறமுடியும். ஆசிரியர்கள் சரிவர பயிற்சிபெறவேண்டும்; மாணவர்களின் பார்வையிலும் பயிற்சி முறை சீராக்கப்பட வேண்டும்.

மாற்றம் என்பது அவசியம் எதிர்ப்பு, குழப்பம், விமர்சனம் போன்றவற்றை எழுப்பும். ஆனால் திட்டமிட்டு செயல்படும் ஆளும்தரப்பின் முயற்சிகள், குறிப்பாக இளைய தலைமுறையின் மேம்பாட்டுக்காக என்ற நோக்கத்தில் அமையும் போது, அது சீர்திருத்தம் எனவே பார்க்கப்படும்.

கல்வி என்பது அரசு ஏற்கும் பொறுப்பின் மையம். இன்று செய்யப்படும் கல்வி மறுசீரமைப்பு, நாளை உருவாகும் நாடு எப்படிப்பட்டது என்பதை தீர்மானிக்கும். இதற்காக ஆளும்தரப்பும், மக்கள் சமூகமும் சேர்ந்து செயல்பட வேண்டிய காலம் இது




## மோசடி வழக்கில் குற்றவாளியான மரைன் லு பென்!

## பிரான்சில் ஜனாதிபதிக்கு போட்டியிட தடை;

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றில் போலி வேலை வாய்ப்பு மோசடி வழக்கின் பிறகு தீவிர வலதுசாரித் தலைவர் ஐந்து ஆண்டுகளுக்கு அதிபர் பதவிக்கு போட்டியிட தடை விதிக்கப்பட்டுள்ளது.

### தீவிர வலதுசாரி அரசியல்வாதி:

தற்போது ஊழல் குற்றச்சாட்டில் தண்டனை பெற்ற பிரெஞ்சு தீவிர வலதுசாரித் தலைவர் மரைன் லு பென் (Marine Le Pen) எதிர்வரும் 2027 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை மார்ச் 31இல் பிரான்ஸ் நீதிமன்றம் தடை செய்தது.

57 வயதான மரைன் லு பென் நீண்ட கால பிரெஞ்சு அரசியல்வாதி ஆவார். தொழில்முறையில் ஒரு வழக்குரைஞரான இவர் பிரான்சின் வலதுசாரிக் கட்சியான தேசிய முன்னணியின் (Front National) தலைவியாக உள்ளார். இவருக்கு முன் இவரது தந்தை ழான்-மரீ லு பென் அக்கட்சியின் தலைவராக இருந்தார்.



தேசிய பேரணி (RN) கட்சித் தலைவர் ஐரோப்பிய தீவிர வலதுசாரிகளின் மிக முக்கியமான நபர்களில் ஒருவரும் மேலும் பிரான்சின் 2027 ஜனாதிபதித் தேர்தல் போட்டிக்கான கருத்துக் கணிப்புகளில் முன்னணியில் இருப்பவர் லு பென். ஆனால் பிரான்ஸ் நீதிமன்றத்தின் தீர்ப்பு லு பென்னுக்கு ஒரு பேரழிவு தரும் பின்னடைவாக அமைந்தது.

உடனடியாக அமலுக்கு வரும் வகையில் ஐந்து ஆண்டுகளுக்கு பதவிக்கு போட்டியிட அவருக்கு தடை விதிக்கப்பட்டது. இது 2027 இல் பிரெஞ்சு ஜனாதிபதி பதவிக்கு நான்காவது முறையாக போட்டியிடுவதைத் தடுக்கும்.

ஒன்பது வார விசாரணைக்குப் பிறகு, மரைன் லு பென் போலி வேலைவாய்ப்பு மோசடி மூலம் ஐரோப்பிய நாடாளுமன்ற நிதியை மோசடி செய்ததாக குற்றவாளி என நிரூபிக்கப்பட்டார்.

ஆனாலும் தீர்ப்பு மற்றும் தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு செய்வதாக அவர் கூறியுள்ளார். இதில் நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் - இரண்டு ஆண்டுகள் இடைநீக்கம் செய்யப்பட்ட தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. மற்றும் 100,000 யூரோ அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

### மரைன் லு பென் குற்றவாளியா?

பாரிசில் நிதிக் குற்றங்களில் நிபுணத்துவம் பெற்ற நீதிபதியான பெனடிக்ட் டி பெர்துயிஸின் தீர்ப்பின்படி, ஐரோப்பிய நாடாளுமன்ற நிதி மோசடியில் லு பென் இருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

2004 முதல் 2016 வரை, ஸ்ட்ராஸ்பேர்க் அல்லது பிரஸ்ஸல்ஸை தளமாகக் கொண்ட அவர்களின் கட்சி உதவியாளர்களுக்கு ஊதியம் வழங்க ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட வரி செலுத்துவோர் பணம் செலுத்தப்பட்டுள்ளது.

தீவிர வலதுசாரி தேசிய பேரணி (RN) கட்சியினர பிரான்சில் உள்ள கட்சி ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குவதற்காக இந்த நிதி பயன்படுத்தப்பட்டது.

போலியான ஒப்பந்தங்களின் கீழ் பிரான்சில் கட்சி அல்லது கட்சித் தலைவர்களுக்காக பணியாற்றியவர்களுக்கு ஊதியம் வழங்க உதவும் திட்டத்தின் இருப்பு குறித்து சந்தேகம் என்று இந்த நீதிமன்றம் கண்டறிந்தது.

இது ஐரோப்பிய நிதிகளுக்கு 4.8 யூரோ மில்லியன் இழப்பை ஏற்படுத்தியதாக மதிப்பிடப்பட்டது. 2004 முதல் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினராகவும், 2011 முதல் கட்சியின் தலைவராகவும் இருந்த

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# பிரான்சில்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

லு பென், சுமார் 474,000 யூரோ மதிப்புள்ள எட்டு ஒப்பந்தங்களை நேரடியாக ஏற்பாடு செய்ததற்காக குற்றவாளி எனக் கண்டறியப்பட்டுள்ளார்.

அத்துடன் அவர் அதிகாரம் மற்றும் உறுதியுடன் மேற்கொண்ட பரந்த போலி வேலைவாய்ப்புத் திட்டத்தை தூண்டுவதில் முக்கியமானவராக இருந்ததாக இந்திய நீதிமன்றம் கூறியுள்ளது.

## மரைன் லு பென்னின் நிதி மோசடி:

அவரின் வலதுசாரி யூஹி கட்சிக்கான எட்டு ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்ததாகக் கண்டறியப்பட்டனர். மேலும் 12 பேர் நாடாளுமன்ற உதவியாளர்களாக போலி ஒப்பந்தங்களைப் பெற்றதாகக் கண்டறியப்பட்டனர். இரண்டு கணக்காளர்கள் மற்றும் கட்சிப் பொருளாளரும் இதன் போது தண்டிக்கப்பட்டனர்.



ஐரோப்பிய நாடாளுமன்ற உதவி ஒப்பந்தங்களின் கீழ் கட்சிப் பணிக்காக ஊதியம் பெற்றதாகக் கண்டறியப்பட்டவர்களில் லு பென்னின் மறைந்த தந்தை ஜீன்-மேரி லு பென்னின் முழுநேர மெய்க்காப்பாளரும் அவரது தனிப்பட்ட செயலாளரும் அடங்குவர்.

பிரான்சில் உள்ள கட்சியின் மத்திய அலுவலகத்திற்கான நிகழ்வுகளில் உண்மையில் பணியாற்றிய மரைன் லு பென்னின் சகோதரி யான் லு பென்னும் இந்த வழக்கில் தண்டிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பணத்தை என்ன செய்தார்கள்?

லு பென்னின் நிதி சிக்கலில் இருந்த ஃப்ரண்ட் நேஷனல் கட்சிக்கு நிதியளிக்க இந்த மோசடி திட்டம் பணத்தை வழிவகுத்தது என்று நீதிபதிகள் கண்டறிந்தனர்.

ஐரோப்பியநாடாளுமன்றநிதியிலிருந்து கட்சி ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மிக வசதியான தொகைகள் என்று நீதிமன்றம் கூறியது. அதை கட்சி இல்லையெனில் செலுத்தியிருக்க முடியாது. கட்சி நிறுவனர் ஜீன்-மேரி லு பென் போன்ற கட்சித் தலைவர்களுக்கு இந்த அமைப்பு வசதியான வாழ்க்கையை வழங்க அனுமதித்தது.

அவருக்கு ஒரு செயலாளர் மற்றும் மெய்க்காப்பாளர் இருந்தனர். அவர் இந்தத் திட்டத்தின்ஒருபகுதியாகஇருந்ததாகவும்குற்றம் சாட்டப்பட்டார். ,ஆனால் உடல்நலக்குறைவு காரணமாக அவர் விசாரணையில் நிற்கவில்லை.

## நீதிமன்றில் எந்த ஆதாரம் ?

ஒப்பந்தங்கள் போலியானவை என்றும், ஐரோப்பியநாடாளுமன்றத்திற்காக அல்ல, மாறாக கட்சிக்காகவே பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் பரந்த அளவிலான சான்றுகள் உள்ளதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், முன்பு வழக்கறிஞராக இருந்தவர் கட்சிப் பொருளாளருக்கு அனுப்பிய 2014 மின்னஞ்சலை நீதிபதிகள் மேற்கோள் காட்டினர்.

## குற்றத்தை ஒப்புக் கொண்டாரா?

நீண்ட விசாரணையின் போது, குற்றம் சாட்டப்பட்ட மற்றவர்களைப் போலவே லு பென்னும் நீதிமன்றத்தில் தான் நிரபராதி என்று கூறினார்.





சிறிதளவு முறைகேடு அல்லது சிறிதளவு சட்டவிரோதச் செயலைச் செய்ததாக எனக்கு எந்த உணர்வும் இல்லை. தீர்ப்புக்குப் பிறகு, தான் நிரபராதி என்று மீண்டும் மீண்டும் கூறி, மேல்முறையீடு செய்வதாகக் கூறினார்.

நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் சட்டத்தை மீறியதுடன், நேர்மையின் முக்கியத்துவத்தையோ எந்த மனசாட்சியையும் வெளிப்படுத்தவில்லை என்றும் குறிப்பிட்டனர்.

## லு பென் நிரபராதி ?

இந்த தீர்ப்பின் பின் ஒரு தொலைக்காட்சி நேர்காணலில் லு பென், தான் நிரபராதி என்றும், தனது ஜனாதிபதி பதவியைத் தடுக்கும் நோக்கில் அரசியல்மயமாக்கப்பட்ட தீர்ப்பு என்று விவரித்ததற்கு எதிராக விரைவில் மேல்முறையீடு செய்வதாகவும் கூறினார்.

தற்போது 2027 ஆம் ஆண்டுக்கான போட்டியில் இருந்து தான் விலகி இருப்பதாகவும், ஆனால் தனது எதிர்காலத்திற்காக தொடர்ந்து போராடுவதாகவும் அவர் கூறினார்.

லு பென்னின் ஐந்து ஆண்டு பொது அலுவலகத் தடையை மேல்முறையீடு மூலம் நிறுத்தி வைக்க முடியாது. இருப்பினும் அவர் தனது பதவிக்காலம் முடியும் வரை தனது நாடாளுமன்ற பதவியைத் தக்க வைத்துக் கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.



காலைக்கதிர்
Kalaikkathir

# உள்ளாட்சி தேர்தல் 2025

## வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் வெற்றியை உறுதிப்படுத்த பிரதமர் களத்தில்

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய அவர்களின் பங்கேற்புடன் ஈரப்பெரியகுளத்தில் பொதுக் கூட்டம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற பல பொதுக் கூட்டங்களில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பங்கேற்றார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தேசிய மக்கள் சக்தியின் கீழ் வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் பொதுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அந்தவகையில், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை வேட்பாளர்களுக்கு ஆதரவு வேண்டி வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதமர் கலந்து கொண்டார்.









இப் பொதுக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ம. ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை வேட்பாளர்கள், பொது மக்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். 100

## தமிழ் காங்கிரஸின் வல்வை வேட்பாளர்கள் அறிமுகம்

வல்வெட்டித்துறைநகரசபைக்கானதேர்தலில்போட்டியிடுகின்ற அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்களை அறிமுகம் செய்துவைக்கும் கூட்டம் சனிக்கிழமை வல்வெட்டித்துறை நகராட்சி மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்த்தேசியக் கட்சியின் வல்வை இணைப்பாளர் வி. கவிச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ. கஜேந்திரன், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா, பொதுச் செயலாளரும் வல்வை நகரசபையின் முதன்மை வேட்பாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம், சமூக- அரசியற் செயற்பாட்டாளர் அருந்தவபாலன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஸ், யாழ்.மாவட்ட அமைப்பாளர் குணரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.





## பொதுஜன ஐக்கிய முன்னணியின் விருதோடை வட்டார தேர்தல் காரியாலயம் திறந்து வைப்பு

கற்பிட்டி பிரதேச சபைத் தேர்தலில் கதிரை சின்னத்தில் போட்டியிடும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் விருதோடை வட்டார (விருதோடை, நல்லாந்தலுவ, புழுதிவயல்) தேர்தல் பிரசார அலுவலகத் திறப்பு விழாவும், மக்கள் சந்திப்பும் வெள்ளிக்கிழமை இரவு நல்லந்தழுவையில் மிகவும் விமரிசையாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கற்பிட்டி முஸ்லிம் பிரதேச அமைப்பாளரும், வேட்பாளர்களில் ஒருவருமான எஸ்.எச்.எம்.முஸம்மில், அரசியல் செயற்பாட்டாளர் ஸப்வான் ஸல்மான், பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் விருதோடை வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளர், சமூக செயற்பாட்டாளர் எம்.என்.எம்.றினோஸ், கடையாமோட்டை வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளர் சீ.எம்.நஸார் உட்பட உலமாக்கள், கல்விமான்கள், இளைஞர்கள், பிரதேச மக்கள், ஆதரவாளர்கள் என பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆரம்பகால அரசியல் செயற்பாடு, கட்சியின் எதிர்கால செயற்திட்டங்கள், விருதோடை வட்டாரத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் குறித்து விருதோடை வட்டார வேட்பாளர் எம்.என்.எம்.றினோஸ் மக்களுக்கு தெளிவுபடுத்தினார்.

இதன்போது, பொதுஜன ஐக்கிய முன்னணியின் விருதோடை வட்டார (விருதோடை, நல்லாந்தலுவ, புழுதிவயல்) தேர்தல் பிரச்சார அலுவலகம் ஊர் மக்கள், உலமாக்கள் வேட்பாளர்கள் ஆகியோரால் உத்தியோக பூர்வமாக திறந்துவைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.





காலைக்கதிர் Kalaikkathir

# உள்ளாட்சி தேர்தல் 2025

## டிஜிற்றல் நகரக் கட்டமைப்பை உருவாக்க பேராதரவு தாருங்கள்

### தேசியமக்கள் சக்தி வேட்பாளர் லக்ஸ்சனா தெரிவிப்பு



வவுனியாமாகரசபையின்ஆட்சிஅதிகாரம்எமக்கு வழங்கப்பட்டால் அரசின் ஆதரவுடன் டிஜிற்றல் மாநகரமாகவவுனியாவைமாற்றியமைப்போம்என்று தேசிய மக்கள் சக்தியின் மாநகரசபை வேட்பாளர் லக்ஸ்சனா நாகராஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள செய்தி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மூவினமக்களும் வசித்துவரும் வவுனியா நகரம் வடக்கின் வியாபார மத்தியஸ்தலமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. அந்தவகையில் அதனை நவீனமுறையில் கட்டமைக்க வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொருநாளும் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக கிராமங்களில் இருந்து நகரத்திற்கு வருகின்ற மக்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. ஆனால் மாநகரம் என்றவகையில் அது மக்களின் தேவையை முழுமையாக பூர்த்திசெய்யவில்லை. அடிப்படை குறைபாடுகள் பல உள்ளன.

அதனை மாற்றியமைக்க வேண்டும்.புதிய டிஜிற்றல் முறைமையிலான ஒரு ஸ்மார்ட் சிற்றி ஒன்றை கட்டமைக்க வேண்டும். எனவே மாநகரசபையின் ஆட்சி அதிகாரத்தை மக்கள் எமக்கு வழங்கினால் அதனை நாம் நிச்சயம் நிறைவேற்றிகாட்டுவோம்.தற்போதுநாட்டில்தேசிய மக்கள் சக்தி ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்றது. அந்தவகையில் அரசின் ஆதரவுடன் எமக்கு அதனை செய்வது இன்னும் இலகுவானதாக இருக்கும்.

அத்துடன் எனது வட்டாரமான கடை வீதியில் உட்கட்டமைப்பு வசதிகள் பல மேம்படுத்தப்படவேண்டிய நிலையில் உள்ளது. குறிப்பாக கற்குழி தேக்கவத்தை பிரதானவீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படவில்லை. அதனை காப்பெற் வீதியாக மாற்றுவதற்கான நடவடிக்கையினை எடுத்துள்ளோம். தேக்கவத்தை பகுதியில்அமைந்துள்ளமைதானம்புனரமைக்கப்பட்டு மின்னொளியிலான மைதானமாக உருவாக்கும் திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கவுள்ளோம்.

இதேவேளை எனது வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக நிரந்தரமாக வசித்துவரும் மக்களிற்கு காணி உரிமங்கள் இதுவரை கிடைக்கவில்லை. நாட்டில் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் கட்சி என்றவகையில் தேசியமக்கள் சக்தி ஊடாக உரிய அமைச்சுடன் அணுகி அதனை தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

அதனோடு இணைந்து கற்குழி பகுதியில் ரயில் கடவைக்கு அண்மையில் இருக்கின்ற குடும்பங்களுக்கு பொருத்தமான இடத்தில் வீட்டுத்திட்டம் ஒன்றை வழங்குவதற்கான செயற்பாடும் முன்னெடுக்கப்படும்.

எனவே மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக மத்திய அரசின் ஆதரவுடன் களம் காண்கின்ற எமக்கு மக்கள் ஆணை வழங்கவேண்டும். எமது கரங்களை பலப்படுத்த வேண்டும். அதன் மூலமே பலமான சபையை அமைக்க முடியும்.

இவைவெறுமனேதேர்தல்காலத்தில்வழங்கப்படும் வாக்குறுதிகளாக மாத்திரம் இருக்காது. நான் தேர்தலில் வெற்றிபெறாவிட்டாலும் தேசியமக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக இந்த வாக்குறுதிகள் அனைத்தும் நிச்சயமாக நிறைவேற்றித்தரப்படும். - என்று தெரிவித்துள்ளார். 100

## புதியதோர் அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்கவே களமிறங்கினேன்

### கொட்டாஞ்சேனை கிழக்கு வட்டார வேட்பாளர் காயத்ரி விக்கிரமசிங்க தெரிவிப்பு



ஊழல்முறைகேடுகளும்அதிகாரதுஷ்பிரயோகமும் இல்லாத புதியதொரு அரசியல் கலாசாரத்தை தோற்றுவிப்பதற்கு தன்னை அர்ப்பணித்திருக்கும் ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவின் தேசிய தலைமைத்துவத்தை வலுப்படுத்துவதற்கான பணிகளில் ஒன்றாகவே உள்ளூராட்சி தேர்தல்களில் கொழும்பு வடக்கு தொகுதியின் கொட்டாஞ்சேனை கிழக்கு வட்டாரத்தில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக போட்டியிடுவதாக காயத்ரி விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

முறைமை மாற்றம் ஒன்றை வேண்டிநின்ற இலங்கை முன்னென்றும் கண்டிராத மக்கள் கிளர்ச்சியின் விளைவாக நாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்ட அரசியல்சிந்தனை மாற்றமே தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்கவை நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவிக்கு கொண்டுவந்தது.

முன்னைய ஆட்சிகளின் கீழ் தலைவிரித்தாடிய ஊழல்முறைகேடுகள், அதிகாரதுஷ்பிரயோகம், குடும்ப அரசியல் ஆதிக்கம், சட்டத்தின் ஆட்சி சீர்குலைவு ஆகியவற்றை முடிவுக்கு கொண்டுவருவதற்காக இன, மத, பிரதேச வேறுபாடுகள் கடந்து கிளர்ந்தெழுந்த மக்கள் பழைய பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கங்களை நிராகரித்து முறைமை மாற்றத்துக்காக பதவிக்கு கொண்டுவந்த ஜனாதிபதி திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை வலுப்படுத்த வேண்டியது நாட்டினதும் எதிர்காலச் சந்ததிகளினதும் நல்வாழ்வில் அக்கறை கொண்ட ஒவ்வொரு குடிமகனினதும் கடமையாகும்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமான பெரும்பான்மையைக் கொண்டிருக்கின்ற போதிலும், அதிகார அகங்காரம் இல்லாமல் நாட்டின் நலன்களை மாத்திரமே மனதிற்கொண்டு செயற்படுகின்றஜனாதிபதிதிசாநாயக்கவின் முன்னுதாரணமான தலைமைத்துவத்தை வலுப்படுத்தி புதிய அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்கும் பயணத்தில் இணைந்து கொண்டு நான் உள்ளூராட்சி தேர்தல்களில் கொட்டாஞ்சேனை கிழக்கு வட்டாரத்தில் போட்டியிடுகிறேன்.

இனவாதமும் மதத்தீவிரவாதமும் இனிமேல்நாட்டில்தலையெடுக்கஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று சூளுரைத்துக்கொண்டு சகல இனங்களையும் சேர்ந்த மக்களையும் அரவணைக்கும் முற்போக்கான கொள்கைகளையும் செயற்திட்டங்களையும் முன்னெடுக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சுமுகமாக ஆட்சிசெய்வதை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்ற அதிகாரம் எல்லாம் தேசிய மக்கள் சக்தி வசமே இருக்கிறது. உள்ளூர் மட்டத்தில் மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொறுப்புக்களைக் கொண்ட உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகங்களும் தேசிய மக்கள் சக்தியின் கைகளில் இருந்தால் சுமுகமான ஆட்சிமுறையை உறுதிப்படுத்துவதற்கு வசதியாக இருக்கும். அதனால் உள்ளூராட்சி தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு அமோக ஆதரவை வழங்கி அதிகப்பெரும்பான்மையான சபைகளை கைப்பற்றுவதற்கு மக்கள் வாக்களிக்க வேண்டும்.

முன்னர் நான் கொழும்பு மாநகரசபையின் உறுப்பினராக இருந்து மக்கள் நல்வாழ்வுக்காக ஆற்றிய நற்பணிகளை பொதுவில் கொழும்பு வடக்கு மக்களும் குறிப்பாக கொட்டாஞ்சேனை மக்களும் நன்கு அறிவார்கள். தேசிய மக்கள் சக்தியின் ஊடாக எனது பணிகளை மேலும் ஊக்கத்துடன் முன்னெடுப்பேன் என்பதை கொட்டாஞ்சேனை கிழக்கு வட்டார மக்களுக்கு உறுதிளிக்கிறேன்.

ஊழலும் துஷ்பிரயோகமும் இல்லாத ஆட்சிமுறையை முன்னெடுக்கும் ஜனாதிபதி தலையையிலான அரசாங்கத்தின் கீழ் மேலும் சிறப்பான பணிகளை உள்ளூராட்சி சபைகளால் செய்யமுடியும் என்பது நிச்சயமானது. அதனால் என்னை மீண்டும் கொழும்பு மாநகரசபை உறுப்பினராக பெரும்பான்மை வாக்குகளால் தெரிவுசெய்து மக்கள் பணியைத் தொடர ஒத்துழைப்பும் ஆதரவும் தருமாறு வாக்காளர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

## அறிக்கை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவின் பேரில் அவரது செயலாளரால் அறிக்கை ஒப்படைக்கப்பட்டது என்று அரசுத் தலைவர் செயலகம் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டது.

அரசுத் தலைவர் பொலன்னறுவையில் நேற்றுக்கலந்துகொண்ட தேர்தல்கூட்டத்திலும் இதனைத்தெரிவித்தார். அறிக்கையைமிகவும் கவனமாகஆய்வுசெய்துவிசாரணைகளுக்குப் பயன்படுத்துமாறு தாம் அறிவுறுத்தியுள்ளார் என்றும் ஜனாதிபதி கூறினார்.

ஈஸ்டர் தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கு நாங்கள் மிகத் தெளிவான, படிப்படியான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். நாங்கள் தொடர்ந்து அதைச் செய்து வருகிறோம். ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் அறிக்கைகள் சமூகத்திற்கோ அல்லது குற்றப் புலனாய்வுத் துறைக்கோ சமர்ப்பிக்கப்படவில்லை. அறிக்கையின் சில பகுதிகள் மறைக்கப்பட்டன. இன்று, ஈஸ்டர் ஆணைக்குழு அறிக்கையில் மறைக்கப்பட்ட அனைத்துஆவணங்களும்விசாரணைக்காக குற்றப்புலனாய்வுத்துறைக்குஅனுப்பப்பட்டன. நான் அவர்களிடம் அதை கவனமாகப் படித்து விசாரணை நடத்தச் சொன்னேன் எ-ன்று அரசுத் தலைவர் தெரிவித்தார்.

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையத்தின் அறிக்கைகூட நேற்றே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது. அரசுத் தலைவர் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, அதனை ஜனாதிபதியின் செயலாளர் நேற்று குற்றப் புலனாய்வுத் துறையிடம் (ஸீஙூம்) அதிகாரப்பூர்வமாக ஒப்படைத்தார். பொது பாதுகாப்பு அமைச்சர் விஜேபால இதனை உறுதிப்படுத்தினார்.

## நான்காவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாக, ஏப்ரல் 3 முதல் 11 வரை, நாணய நிதியக் குழு இலங்கையில் அதிகாரிகளுடன் பயனுள்ள பேச்சுக்களை நடத்தி, நான்காவது மறுஆய்வின் முன்னோட்டத்தை முடித்தது. இந்தப் பேச்சுக்களில், இலங்கையின் பொருளாதார செயல்திறன் மற்றும் கொள்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. அதே நேரத்தில், உலகளாவிய நிலைமைகள் மற்றும் வெளிநாட்டு அரசியல் போக்குகள், குறிப்பாக அமெரிக்காவின் வர்த்தக வரிகள் என்பன இலங்கையின் பொருளாதார மீட்பில் சவால்களை ஏற்படுத்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இலங்கை, இந்த நான்காவது மறுஆய்வை வெற்றிகரமாக முடிக்க, நாணய நிதியம் மற்றும் பிற பன்னாட்டு நிதி நிறுவனங்களுடன் நெருக்கமான ஒத்துழைப்போடு செயற்படுகின்றது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# ஆசியாவின் ஆச்சரியம்மிக்க நகரமாக காத்தான்குடியை மாற்றி அமைப்போம்

### அதற்கான முழுமையான திட்டம் எம்மிடமுள்ளது என்கிறார்: ஹிஸ்புல்லாஹ் எம்.பி



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் காத்தான்குடி நகர சபையில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மாபெரும் தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் மு.கா உயர்பீட உறுப்பினர் ராஸிக்கின் தலைமையில் காத்தான்குடி அல்-அக்ஸா சதுக்கத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் கலந்துகொண்டார்.

அவர் இதன்போது கருத்துத்தெரிவிக்கையில் -

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் எதையெல்லாம் நாங்கள் பேசினோமோ அவற்றை எல்லாம் நிறைவேற்ற நாங்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். எம்மால் முடிந்த சில வற்றை செய்திருக்கிறோம்.

காத்தான்குடி நகர சபைக்குட்பட்ட பன்னிரெண்டு கிலோமீற்றர் வீதியை காப்பெற் வீதியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது இன்னம் இரண்டு மாதங்களுக்குள் நிறைவடையும்.

அதேபோன்று, காத்தான்குடி நகர சபைக்குட்பட்ட அனைத்து வீதிகளையும் காப்பெற்இடும்பணியினைஎதிர்வரும்டிசெம்பர் மாதமளவில்நிறைவுசெய்வதற்கும்அனைத்தும் முயற்ச்சிகளையும்மேற்கொண்டிருக்கிறோம்.

எதிர்வரும்உள்ளூராட்சிமன்றத்தேர்தலில் காத்தான்குடிநகரசபையைவெல்வதற்குஎந்த சவாலும்எமக்கில்லை. பத்துவட்டாரங்களையும் மிக இலகுவாக வெல்வோம்.

எம்மோடு மேலும் சில கட்சிகள் இணைவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளன. காத்தான்குடி நகர சபையை அதிக பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டு முழுமையான அதிகாரத்தை பெற்று ஆட்சியமைப்பதற்குரிய அனைத்து வியூகங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

ஆசியாவின் ஆச்சரியமிக்க நகரமாக காத்தான்குடி நகரம் மாற்றப்படும். அதற்கான அனைத்து திட்டங்களும் எம்மிடமுள்ளது. மிக விரைவில் அதனை நிறைவேற்றி பிரபல்யமிக்க சுற்றுலா நகரமாக மாற்றப்படும் எனத் தெரிவித்தார்.

இதன்போது, கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், பிரதேச மத்திய குழு உறுப்பினர்கள், காத்தான்குடி நகர சபை வேட்பாளர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், ஊர் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துசிறப்பித்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# கண்டியில் சிறுவர்களுக்கான சித்திரம் வரையும் போட்டி!

புத்தசாசன, சமய விவகார, கலாசார அமைச்சு கண்டியில் சிறுவர்களுக்கான சித்திரம் வரையும் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

கண்டியில் தந்போது இடம் பெற்று வரும் ஸ்ரீ தலதா கண்காட்சிக்கு இணையாக இது ஒழுங்கு செய்யபட்டுள்ளது.

புத்தசாசன, சமய விவகார, கலாசார அமைச்சர் கலாநிதி இனிதும சுனில் செனவி, பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்கா மற்றும் அதிகாரிகளின் பங்களிப்புடன் இக் கண்காட்சியானது நடைபெறுகிறது.

இதனைத்தொடர்ந்து, பங்குபற்றும் சிறுவர் சிறுமிகளுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.





# உயிர்த்த ஞாயிறு பாதயாத்திரை!

இயேசு ஜீவிக்கிறார் சர்வதேச சுவிசேஷ பணிமனையின் உயிர்த்த ஞாயிறு பாதயாத்திரை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அனுசரிக்கப்பட்டது.

சர்வலோகத்தையும் படைத்து ஆளுகை செய்யும் தெய்வமாகிய இயேசு கிறிஸ்து மனிதனின் பாவத்திற்கான தண்டனையை தாமே சிலுவையில் சுமந்து, மரித்து மூன்றாம் நாளில் உயிரோடெழுந்தார்.

இயேசுவின்உயிர்த்தெழுதலைநினைவுகூர்ந்து, ஆயிரக்கணக்கான ஜனங்கள் பாதயாத்திரையாக நடந்தார்கள்.

பாதயாத்திரையானது கொழும்பு கொட்டாஞ்சேனை (நவீன் செரமிக் எதிரில்) காலை 9.00 மணிக்கு ஆரம்பித்து, ஹெட்டியாவத்தை டொக்லன், அழூத்மாவத்தை ஊடாக இயேசு ஜீவிக்கிறார் ஆலயத்தை வந்தடைந்தது.

பின்னர் ராஜாதி ராஜாவாகிய இயேசுவின் நாமத்தை மகிமைப்படுத்தி ஆராதனை செய்யப்பட்டது.

சுவி. கலாநிதி. ஆ.சு. இராஜேந்திரம் மற்றும் சுவி. டாக்டர். ஊ.ஏ. இராஜேந்திரம் அவர்களால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமையை குறித்து தேவ செய்தி வழங்கினார்கள்.










காலைக்கதிர் Kalaikkathir

# சம்மாந்துறை ஹிஜ்றா ஜும்ஆ மஸ்ஜிதில் ரூ. 50 லட்சம் செலவில் சோலர் பொருத்தல்

(நூருல் ஹுதா உமர்)

நாட்டின் பொருளாதார நெருக்கடியில் சிக்கி பல்வேறு சமூக கட்டமைப்புக்களும் சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளமைக்கு நிவாரணமளிக்கும் வகையில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்கள் ரி- 100 திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறார். அதன் ஓர் அங்கமாக சம்மாந்துறை பத்ர் ஹிஜ்றா ஜும்ஆ மஸ்ஜிதுக்கு சோலார் வசதிகளை ஏற்படுத்தி கொடுத்துள்ளார்.

சம்மாந்துறை பத்ர் ஹிஜ்றா ஜும்ஆ மஸ்ஜிதின் நீண்டநாள் பிரச்சினையாக இருந்து வந்த பெருந்தொகை மின்சார கட்டண பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கும் விதமாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்கள் தனது ரி - 100 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு 50 லட்சம் ரூபா பெறுமதியான சோலார் சிஸ்டம் சம்மாந்துறை பத்ர் ஹிஜ்றா ஜும்ஆ மஸ்ஜிதின் மேல்தளத்தில் பொருத்தப்பட்டுள்ளது. குறித்த வேலைத்திட்டத்தின் நிறைவு பணிகளை கள விஜயம் செய்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் பார்வையிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் முன்னெடுத்த இந்த சோலர் சிஸ்டம் பொருத்தும் வேலைத்திட்டத்தால் பள்ளிவாசல் மாதாந்தம் இலங்கை மின்சார சபைக்கு செலுத்திவந்த மின் பட்டியல் கட்டணம் 85 ஆயிரம் இப்போது இல்லாமலாகிஎவ்விதகட்டணமும்இப்போதுநாங்கள் செலுத்துவதில்லை என்றும் இந்த சோலர் மூலம் மாதாந்தம் 70-75 ஆயிரம் ரூபா பள்ளிவாசலுக்கு மேலதிகமாக வருமானமாக வருவதாகவும் இந்த வருமானத்தினூடாக பள்ளிவாசலின் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்யும் வாய்ப்பு தங்களுக்கு கிடைத்துள்ளதாகவும் இப்படியான நிலையான வருமான மூலங்கள் கிடைக்க உதவிய முன்னாள் எம்.பி எச்.எம்.எம். ஹரீஸுக்கு நன்றிகளையும் தமது பாராட்டுக்களையும் தெரிவிப்பதாக சம்மாந்துறை பத்ர் ஹிஜ்றா ஜும்ஆ மஸ்ஜிதின் நிர்வாக சபை தலைவர் பொறியியலாளர் எம்.ஐ. நஸீர் இதன்போது தெரிவித்தார்.

இந்த விஜயத்தில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்களின் வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல். நூருல் ஹுதா உட்பட முன்னாள் எம்.பி ஹரீஸ் அவர்களின் இணைப்பாளர்கள், நம்பிக்கையாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.









காலைக்கதிர்
Kalaikkathir

# பிரதமரின் வருகைக்காக நெடுங்கேணியின் பல பிரதேசங்களுக்கு மின்சாரம் துண்டிப்பு

தேர்தல் பிரசாரத்திற்காக நெடுங்கேணி பிரதேசத்திற்கு நேற்று(ஞாயிற்றுக்கிழமை) பிரதமர் வருகை தந்திருந்த நிலையில் பட்டிக்குடியிருப்பு மற்றும் ஒலுமடு பிரதேசங்களுக்கான மின் விநியோக மார்க்கங்களில் மின் துண்டிக்கப்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

பிரதமரின் வருகைக்காக அமைக்கப்பட்டிருந்த மேடைப் பகுதியில் பாதுகாப்பு காரணங்களுக்காக பொருத்தப்பட்ட கருவிகளுக்கும் மற்றும் குறித்த பிரதேசத்தில் மின்சாரம் தடையின்றி கிடைக்க வேண்டும் என்பதற்காவே பட்டிக்குடியிருப்பு, மாரா இலுப்பை, ஒலுமடு போன்ற பிரதேசங்களுக்கான மின்சார விநியோக மார்க்கங்கள் துண்டிக்கப்பட்டு நெடுங்கேணி நகர மத்திக்கு மாத்திரம் மின்சாரம் வழங்கப்பட்டதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்செயற்பாட்டில் பொலிஸார் மற்றும் மின்சார சபை ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர் எனவும் பொதுமக்கள் குற்றம் சாட்டி இருந்தனர்.

இது தொடர்பில் ஏனைய கட்சி பிரதிநிதிகளால் தேர்தல் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் மின்சார சபையின் முறைப்பாட்டு பிரிவோடு தொடர்பு கொண்டு கேட்டபோது -

நெடுங்கேணி பிரதேசத்தின் உயர் மின் மார்க்கத்தில் தென்னை மரத்தின் ஓலை ஒன்று அழுத்திய நிலையில் காணப்பட்டமையால் குறித்த பிரதேசங்களுக்கான மின்சாரம் இடையிடையே துண்டிக்கப்பட்டு வருவதாக கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், இந்துப்பிரதேசத்திற்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டு அதனை சீர் செய்தமையே இந்த மின் துண்டிப்புக்கான காரணம் எனத் தெரிவித்திருந்தனர். 100

# மட்டக்களப்பு – பாசிக்குடா கடற்கரைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை

கிழக்கு மாகாணத்தில் பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலமான மட்டக்களப்பு - பாசிக்குடா கடற்கரைக்கு அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதை அவதானிக்க முடிகிறது.

சித்திரைப் புத்தாண்டு விடுமுறையை முன்னிட்டு உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பாசிக்குடா கடற்கரையை நோக்கி படையெடுக்கின்றனர்.

கடற்கரைக்கு குடும்பத்துடன் வரும் பயணிகள் தாங்கள் மகிழ்ச்சியான முறையில் பொழுதைக் கழிக்க கடலில் நீராடுவதோடு, விளையாட்டுக்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கடற்கரை பகுதியில் இரண்டு மலசலகூடங்கள் மாத்திரமே காணப்படுவதால் பெருந்திரளாக கடற்கரைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் தங்களுடைய இயற்கைத் தேவைகளை நிறைவேற்ற பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.



இவ்விடயம் தொடர்பில் வாழைச்சேனை பிரதேச சபை நிருவாகத்தினர் கவனம் செலுத்தி அடிப்படை வசதிகளை நிறைவேற்றித் தருமாறு சுற்றுலாப் பயணிகள் வேண்டிக் கொள்கின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.04.2025இல் வெளியிடப்பெற்றது